செ.வெ.எண்: 15/ஏப்ரல் நாள்: 13.04.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சட்டமன்ற தொகுதிகள் வாரியாக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் நேரடி ஆய்வு.**

**இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வுப் பணிகளை சட்டமன்ற தொகுதிகள் வாரியாக இன்று (13.04.2016) இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதன்பின்பு பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வுப் பணிகளை துவக்கி வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வாக்குச்சாவடி மையங்களிலும் நேரடி ஆய்வு மேற்கொண்டார்கள்.

முதலாவதாக, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளிடையே மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வுப் பணிகளை இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பிரெய்லி முறையில் தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு கையேட்டினை மாற்றுத்திறனாளிகள் வாசித்து காண்பித்தனர். மேலும் வாக்குப்பதிவு நாளன்று மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சக்கர நாற்காலிகளையும் வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் அவர்கள் கலந்து கொண்டார். மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் அவர்கள் கல்லூரி மாணவிகளிடையே பேசுகையில் , நாட்டின் வளர்ச்சிக்கு மாணவ, மாணவியர்களின் பங்கேற்பு மிகவும் அவசியமாகும். எனவே நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாளன்று மாணவிகளாகிய நீங்கள் தவறாமல் வாக்களிப்பதோடு உங்களது பெற்றோர் மற்றும் சுற்றத்தார் அனைவரையும் தவறாமல் வாக்களிக்க ஊக்குவித்திட வேண்டும் என பேசினார்.

அதன்பின்பு, திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆர்.எஸ்.மங்கலம் பேரூராட்சியில் உள்ள அரசு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திலிருந்து சுகாதாரத்துறை அலுவலர்கள், செவிலியர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் , மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார்கள்.

தொடர்ந்து பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் வாக்காளர் சேவை மையத்தினை வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பொதுமக்களிடம் வாக்காளர் சேவை மையத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் பரமக்குடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச் சாவடி மையத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்க வருகை தரும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளையும் எவ்வித குறைபாடுமின்றி ஏற்படுத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட கூடுதல் தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (பரமக்குடி), வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் (இராமநாதபுரம்), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை), மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.ஜெயராம், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.குணசேகரி, தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர்.சுமையா தாவூத் உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**